**தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடனஎன்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்களும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 06 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 4,647,242 ஆக இருந்ததுடன் ஆக இருந்ததுடன் அதில் 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான காலமாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,160,384 ஆகவும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத மீதிகளின் பெறுமதி ரூபா 1,129,054 ஆகவும் இருந்தன. | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 7 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 47,584,416 ஆக இருந்ததுடன் ஆக இருந்ததுடன் அதில் 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான காலமாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 46,636,251 ஆகவும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத மீதிகளின் பெறுமதி ரூபா 265,319 ஆகவும் இருந்தன. | செலுத்த வேண்டிய பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு | சிக்கன வாடகையாக ஓராண்டிற்காக மாத்திரமாக இருந்த போதும் 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு 2020 திசெம்பர் 31 வரை நிறுவகத்திற்குரிய அரச விடுதிக்காக வாடகை தொகை அறவிடப்பட்டிருந்தது. | வாடகையை திருத்தம் செய்து தருமாறு விலை மதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 10,237,824 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 6,193,164 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,044,660 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு வருமானம் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்திற்குரிய பொல்கொல்ல உயன்வத்த சந்தியில் அமைந்துள்ள ரூபா 1,200,000 புத்தகப் பெறுமதியிலான பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத நிறுவனத்தின் கட்டிடம் விவசாயத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்ட உள்நாட்டு உணவுச்சாலையொன்றை ஸ்தாபிப்பதற்கு 2017 ஆகஸ்ட் 03 ஆந் திகதி முகாமைத்துவத்தின் அங்கீகாரத்தை வழங்கியிருந்ததுடன் 2019 மே 30 ஆந் திகதி முகாமைத்துவ தீர்மானத்தினால் குறிப்பிட்ட உள்நாட்டு உணவுச்சாலைக்கு மேலதிகமாக கூட்டுறவு உற்பத்தி விற்பனைச்சாலை ஒன்றை தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு செயற்திட்ட முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அம்முகாமைத்துவ தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் 2021 மே மாதம் வரையில் இக்கட்டிடத்தை பயனுள்ள செயற்பாடொன்றிற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 மே 30 ஆந் திகதிய முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் இவ்விடத்தை உள்நாட்டு உணவுச்சாலைக்கு மட்டுப்படுத்தாமல் குறிப்பிட்ட உள்நாட்டு உணவுச் சாலைக்கு மேலதிகமாக கூட்டுறவு உற்பத்தி விற்பனைச்சாலையொன்றை தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உணவுச் சாலையை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு 2019 மே 30 ஆந் திகதிய முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்ட முன்மொழி வொன்றினை தயாரிக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. | முகாமைத்துவ தீர்மானங்களை விரைவில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2001 இன் 1 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் நோக்கங்களான கூட்டுறவு அபிவிருத்திக்குரிய செயற்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் கூட்டிணைத்தல், நவீன தொழில்நுட்ப முறைமை மூலம் பயிற்சி வழங்குதல் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல், திறன்கள் தேவைப்படும் கூட்டுறவினை முகாமைத்துவம் செய்தல், தொழில்சார் ஆலோசனைகளை வழங்குதல், மாதிரி கூட்டுறவு கிராமங்களையும் வியாபார நிலையங்களையும் தாபித்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2019/2020 ஆம் ஆண்டுகளில் இந் நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 71 இல் 44 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தமை காரணமாக அவ்வாறு திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு தடையாக அமைந்தது. எவ்வாறாயினும் இச்செயற்பாடுகள் முன்னைய ஆண்டில் போதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக குறிப்பிட விரும்புகின்றேன். | நிறுவகத்தை கூட்டிணைக்கும் போது இனங்காணப்பட்ட செயற்பாடுகள் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு திட்டங்கள் தயாரித்து செயற்படுத்த வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்ல குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தில் 2979 அடி அளவிலான நிலமாடியில் நடாத்திச் செல்லப்பட்ட கூட்டுறவு கோப் சிட்டி வியாபார நிலையம் 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதியின் பின்னர் மூடப்பட்டு விளைவற்ற வகையில் காணப்படுவதுடன் அதனை வேறு தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததால் ரூபா 2,400,000 கூட்டுத்தொகையான வருமானமொன்று பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்த வருமானம் நிறுவகத்திற்கு கிடைக்காமல் போயிருந்தது. | பல்நோக்கு பிரிவில் வளங்களை உயர் அளவில் பயன்படுத்துவது தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்பட உள்ளது. | நிறுவகத்திடமுள்ள வளங்களை உயர் நலனொன்று பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் பயன்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 71 ஆக இருந்த போதும் 2021 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான பதவியணினர் 37 மாத்திரமாக இருந்ததுடன் 34 வெற்றிடங்களாக இருந்தன. | 17 பதவிகளுக்காக 28 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் ஆட்சேர்ப்பிற்காக அங்கீகாரம் கிடைக்காத 16 பதவிகள் மேலும் காணப்படுகின்றன. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கடடுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 யூன் 08 ஆந் திகதி அங்கீகரிக்கப் பட்டிருந்த மீளாய்வாண்டிற்கான பாதீடு இரண்டு தடவை திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் இரண்டாவது தடவை 2020 நவம்பர் 24 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட திருத்திய பாதீட்டைத் தயாரிக்கும் போது 2020 ஒக்தோபர் வரை உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்கள் கருத்திற் கொள்ள்பபட்டிருந்த போதும் வருமானம் மற்றம் செலவினங்களில் 5.23 சதவீதம் முதல் 53.47 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டமையால் பாதீடு செயற்திறனான பாதீட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 பாதீடு ஆண்டு பூராகவும் காணப்பட்ட 19 வைரஸ் நிலைமையில் இலக்கிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை நிறைவேற்ற முடியாத நிலையில் இரண்டு தடவை திருத்தம் செய்யப்பட்டிருந்தமை மற்றும் திறைசேரியால் நிதிஏற்பாடு ஒதுக்கீடு 4 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டமை காரணம் எனக் குறிப்பிடுகன்றேன். | மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமானவரை சரியான எண்ணிக்கைகள் இட்டு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல் பிரகாரம் தனது விடயப்பரப்பிற்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்படாமல் இருந்ததுடன் நிறுவகத்தினால் கூட்டிணைந்த திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டு இலக்குகள் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதுடன் அடுத்த முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்ற எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டு அவற்றை அடைந்து கொள்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் |